இணைப்பு

[192 ஆம் பக்கத்தில் இனம் 2 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தென் ஆற்காடு மாவட்டம் கடலூர் புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளி, தாளாளர் தேர்தல் வைத்து பணியாளர் குழு (Staff Council) என்று அமைத்து தனது 7—10—1980 நாளிட்ட கடிதத்தில் கடலூர் மாவட்டக் கல்வி அலுவலரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்தார். ஆனால், திடீரென தனது 12—11—1980 நாளிட்ட கடிதத்தில் தேர்தல் வைத்து அமைக்கப்பட்ட பணியாளர் குழுவை ரத்து செய்துவிட்டதாக அப்பள்ளியின் தாளாளர் மாவட்டக் கல்வி அலுவலருக்கு தெரிவித்து இருந்தார். அதில் ரத்து செய்த தற்கான காரணம் எதும் கூறப்படவில்லை. மாவட்டக் கல்வி அலுவலர் இதுபற்றி நிர்வாகத்தினிடம் விளக்கம் கேட்டார். இதற்கிடையில் பணி யாளர் குழு அங்கத்தினர்களும், மேற்படி பள்ளியில் பணிபுரியும் இதர ஆசிரி யர்களும் கடித மூலம் மேற்படி பணியாளர் குழுவை அங்கீகரிக்கும்படி மாவட்டக் கல்வி அலுவலரை கேட்டுக் கொண்டனர்.

இந்நிலையில் நிர்வாகத்தினர், மாணவர்களின் பெற்றோர்களுக்கு பணி யாளர் குழு அமைத்தது சம்பந்தமான விவரங்கள் எடுத்துக் கூறிய பின்னரும், கடந்த நவம்பர் 19 மற்றும் 20 தேதிகளில் பள்ளியின் ஆசிரியர்கள் சிலர் ஒரு மரத்தடியில் கூடி நின்றார்கள் என்றும், அதன் காரணமாக மாணவர்களிடையே சலசலப்பு ஏற்பட்டதாகவும், அதனை நிர்வாகம் சமாளித்தது என்றும் தெரிகிறது. மேலும், நிர்வாகத்தினர், இவ்வாறு தொல்லை கொடுக்க முயற்சி செய்யும் ஆசிரியர் மற்றும் மாணவர்களிடையே கட்டுப்பாடும், கடமையுணர்வும் வளர ஆதரவு நல்குமாறு மாணவர்களின் பெற்றோர்களுக்கு நோட்டீஸ் மூலம் வேண்டுகோள் விடுத்தனர்.

எனவே மாணவர்கள் கீழ்க்கண்ட குறைகளை நிவர்த்திக்க கோரினர்:

(1) பள்ளியின் தாளாளர் தனது 7—10—1980 தேதிய கடிதத்தில் தேர்வுகள் வைத்து அமைக்கப்பட்ட பணியாளர் குழுவை ரத்து செய்தது.

(2) மாணவர்களின் பெற்றோர்களுக்கு ஓர் அறிவிப்பு நோட்டீஸ் கொடுத்தது.

(3) மற்றும் மாணவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதது குறித்து.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் 12—2—1981 அன்று பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர் மற்றும் மாணவர் பிரதிநிதிகள், கல்வி அதிகாரிகள் மற்ற பிரமுகர்கள் ஆகியோரின் கூட்டத்தைக் கூட்டி பிரச்சினைகள் சம்பந்தமாக சில முடிவுகள் எடுக்கப்பட்டன. அம்முடிவுகளின் அடிப்படையில் பள்ளி 16—2—1981 அன்று திறக்கப்பட்டு சுமுகமாக நடைபெற்று வருகிறது.

இணைப்பு I

[28 ஆம் பக்கத்தில் இனம் 2 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

மதுரை சட்டக் கல்லூரியில் ஆசிரியர் பணியிடங்கள் ஏற்கெனவே போதிய அளவு உள்ளன. மேலும் தற்பொழுது மூன்று இளநிலைப் பேராசிரியர் பணி இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காலியாக உள்ள பணியிடங்களை விரைவில் பூர்த்தி செய்ய துரித ஏற்பாடுகள் சட்டக் கல்வி இயக்குநர் செய்து வருகின்றனர். மாணவர்களுக்கு எவ்வித கஷ்டமும் இன்றி பருவ முறைத் தேர்வுக்கு உரிய பாடங்கள் நடத்தி முடிக்கப்பட்டுவிட்டன. பி.ஜி.எல். மற்றும் பி.எல். வகுப்புகள் நல்ல முறையில் நடைபெறுகின்றன.

(2) மதுரை மீனாட்சி மாணவியர் அரசினர் கலைக் கல்லூரி வளாகத்திற்குள் சட்டக் கல்லூரி மாணவியர்களுக்காக ரூ. 1.40 லட்சம் தனிக்கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப் பெற்று கட்டிடம் கட்ட தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(3) மதுரை சட்டக் கல்லூரி மாணவர்கள் தற்போது தொழில் பயிற்சி நிலைய மாணவர் விடுதியில் தங்கி வருகிறார்கள். மதுரை வடக்கு தாலுக்கா நல்லாகுளம் கிராமம் சர்வே எண் 134/2-ல் மாணவர்களுக்கு விடுதி கட்ட இடம் ஒதுக்கப்பட்டுள்ளது . . . .
கட்டிடம் விரைவில் கட்ட ஏற்பாடுகள் செய்யப்படும். மேலும் சிற்றுண்டிச் சாலை போன்ற வசதிகள் தற்போதுள்ள மதுரை சட்டக் கல்லூரி கட்டிடத்தில் விரைவில் செய்து தரப்படும்.